# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்,

காகிதபுரம், கரூர்.

## வனத்தோட்ட மலர்

காடு வளர்போம் ! காகிதம் செய்வோம் ! கற்றலை ஊக்குவிப்போம் !

பதிப்பு - ஏப்ரல் 2019 மலர் - 1

### பதிவுரை

அன்பார்ந்த விவசாயிகளே,

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் விவசாய பெருமக்கள் அனைவருக்கும் இந்த மலர் மூலம் நன்றியுடன் சேர்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறது வனத் தோட்டத்துறை.

இந்த கூழ்மரத்தோட்ட மலரானது, நமது நிறுவனத்தின் கூழ் மரத்திட்ட விவசாயிகளின் நலனுக்காக வெளியிடப்படுகிறது. இந்த மலர் ஆண்டிற்கு 4 முறை உங்களை தேடி வர உள்ளது. மேலும் இதன் மூலம் தங்களுக்கு கூழ்மரங்களின் சந்தை விலை நிலவரம், முக்கிய நிகழ்வுகள், சமீபத்தில் வந்த தொழில்நுட்ப செய்திகள், டி.என்.பி.எல். வனத்தோட்ட திட்டத்தின் கீழ் பயனடைந்து மிகுந்த இலாபம் ஈட்டிய விவசாயிகளின் சாகுபடிக் குறிப்புகள், விவசாய கண்காட்சி மற்றும் கூட்டங்களை பற்றிய விவரங்கள் என பல்வேறு செய்திகளுடன் உங்களை வந்தடைய உள்ளது.

மேலும் இந்த மலரின் மூலம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கும் கூழ்மர விவசாயிகளுக்குமான உறவை பலப்படுத்துவதுடன் விவாயிகளின் தேவை அறிந்து செயலாற்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிட உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்த முயற்சி வெற்றியடையவும், மேலும் இந்த மலரை மேம்படுத்தவும் தங்களின் மேலான ஆதரவும், ஆலோசனைகளும், கருத்துக்களும் வரவேற்க்கப்படுகிறது.

டி.என்.பி.எல். வனத்தோட்டத்துறை



### டி.என்.பி.நிறுவனத்தின் வளர்ச்சி – ஓர் முன்னோட்டம்

டி.என்.பி.எல் நிறுவனமானது கரூர் மாவட்டத்தில் காகிதபுரத்தில் 1985 ஆம் ஆண்டு 90,000 மெ.டன் காகித உற்பத்தியுடன் தொடங்கி, தற்போது 4 லட்சம் மெ.டன் காகித உற்பத்தி செய்யக் கூடிய ஆலையாக வளர்ந்து உள்ளது. இதற்காக ஆண்டொன்றிற்கு சுமார் 10 லட்சம் டன் கரும்புச் சக்கை, 5 லட்சம் டன் கூழ்மரங்கள், 1.5 லட்சம் டன் காகித கழிவுத் தாள்களை மூலப் பொருளாக பயன்படுத்தி வருகிறது. மேலும் 2013 ஆம் ஆண்டு, 3.29 லட்சம் மெ.டன் கொள்ளவு கொண்ட சிமெண்ட் ஆலையினை தொடங்கி காகித கூழ் கழிவுகளில் இருந்து தரமான சிமெண்டினை உற்பத்தி செய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக ஆலையின் வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு 2016 ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் மொண்டிப்பட்டி கிராமத்தில் 2 லட்சம் மெ.டன் கொள்ளவு கொண்ட பல அடுக்கு காகித அட்டை உற்பத்தி ஆலையை தொடங்கி நடத்தி வருகின்றது. இந்த காகித அட்டை ஆலையை மேம்படுத்தும் பொருட்டு சுமார் 1500 கோடி செலவில் மேலும் ஒரு மரக்கூழ் உற்பத்தி பிரிவை நிறுவ திட்டமிட்டு செயல்படுத்த உள்ளது. இத்திட்டம் 2021ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு வரும் பட்சத்தில் ஆண்டொன்றிக்கு சுமார் 12 லட்சம் டன் கூழ் மரக் கட்டைகள் தேவைப்படும். எனவே இந்த ஆலையின் முக்கிய மூலப் பொருளான கூழ்மரத் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 2018-19 ஆம் ஆண்டு முதல் வருடத்திற்கு சுமார் 25,000 ஏக்கர் பரப்பளவில் கூழ்மரங்களை நடவு செய்ய திட்டமிட்டு செயல்படுத்தி வருகின்றது. இதற்காக கூழ்மரகளை சாகுபடி செய்வதற்கு ஊக்கப்படுத்துதல், அதனை கொள்முதல் செய்தல், சாகுபடிக்கு தேவையான நாற்றுகளை உற்பத்தி செய்தல் மற்றும் ஆராய்ச்சியின் மூலம் புது ரக அதிக உற்பத்தி திறன் கொண்ட கூழ்மரங்களை உருவாக்குதல் ஆகியவை வனத்தோட்டத் துறையின் முக்கிய பணியாகும்.

## டி.என்.பி.எல் நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் வனத்தோட்டத் திட்டங்கள்

### பண்ணைக் காடுகள் திட்டம்

இத்திட்டம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான திட்டம். கூழ்மரம் பயிரிட விரும்பும் விவசாயிகள் டி.என்.பி.எல் அலுவலர்களை அணுகி தங்களது நிலத்தின் பட்டா, சிட்டா, அடையாள அட்டையுடன் நாற்றுக்குண்டான மானிய விலைக்கான வரைவோலையுடன் விண்ணப்பித்து இத்திட்டத்தில் பதிவு செய்யலாம்.


இத்திட்டத்தில் இணையும் விவசாயிகளுக்கு மானிய விலையில் சாகுபடி நிலத்திற்கேற்ப தரமான நாற்றுகளை இலவசமாக போக்குவரத்து செய்து தரப்படுகிறது. மேலும் நடவு பராமரிப்புக்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் அறுவடைக்கு தேவையான உதவிகளையும் செய்து தருகிறது.

இத்திட்டத்தில் விவசாயிகள் கூழ்மர நாற்றுகளை வரப்போராங்களிலும், இதர பயிர்களுடன் ஊடு பயிராகவும் சாகுபடி செய்து இரட்டிப்பு இலாபம் பெறலாம்.

நீர்பாசன வசதி உள்ள விவசாயிகள் சவுக்கு, மலை வேம்பு, சிசு மற்றம் கடம்ப கூழ்மரங்களையும், மானாவாரி நிலங்களில் பயிரிட உள்ள விவசாயிகள் தைலம், சூபாபுல் போன்ற கூழ்மரங்களை தேர்வு செய்து நடவு செய்யலாம்.

### மூலதனக் காடுகள் திட்டம்

இத்திட்டம் அரசு மற்றும் தனியார் நிலங்களில் ஒரே இடத்தில் 50 ஏக்கருக்கும் மேல் நிலப்பரப்பு அமைந்திருந்தால் டி.என்.பி.எல் நிறுவனமானது குறைந்த பட்சம் 12 ஆண்டுகள் தனது பொருப்பில் எடுத்துக் கொள்ளும். அத்தகைய நிலங்களில் கூழ்மரக்கன்றுகளை நடவு செய்து, அறுவடை வரை பராமரிக்கும் பொருப்பை நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது. ஐந்து ஆண்டு முடிவில் முதல் சுழற்சி அறுவடையின் போது கிடைக்கும் மொத்த வருவாயில் 70





சதவீதம் நிறுவனத்திற்கும், மீதம் 30 சதவீதம் நிலத்தின் உரிமையாளர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். அறுவடைக்குப்பின் மறுதாம்பு பயிர் பராமரிப்பு செய்து அதில் வரும் இரண்டாம் சுழற்சி மொத்த வருவாயில் 50 சதவீதம் நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்.

மேற்கண்ட இரண்டு திட்டங்களும் 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் மூலம் இதுவரை 1,46,000 ஏக்கர் பரப்பளவில் 27,000 விவசாயிகளின் நிலங்களில் கூழ்மரங்கள் பயிரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 8 ஆண்டுகளில் சுமார் 11.6 லட்சம் டன் கூழ்மரக்கட்டைகள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

### கூழ்மர நாற்றுப்பண்ணை

திட்டங்களுக்கு தேவையான தரமான நாற்றுகளை 2008 ஆம் ஆண்டு முதல் டி.என்.பி.எல் நிறுவனமே தனது குளோனல் நாற்று மற்றும் ஆராய்ச்சி பண்ணை மூலம் உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் 10 கோடிக்கும் மேல் தரமான நாற்றுகளை உற்பத்தி செய்து கூழ்மரத் தோட்டங்கள் உருவாக காரணியாக விளங்கிவருகிறது.

### கஜா புயலால் பாதிப்படைந்த விவசாயிகளின் துயர் துடைத்த நமது நிறுவனம்

கடந்த 16.11.2018 அன்று அதிகாலை சுமார் 110 கி.மீ. வேகத்தில் வீசிய புயல் காற்றால் டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்து விவசாயிகளின் வாழ்வில் மறக்க முடியாத வடுவை ஏற்படுத்தி சென்று உள்ளது. இத்தகைய இக்கட்டான சூழலில், விவசாயிகளின் நலன் கருதி டி.என்.பி.எல் நிறுவனம் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து கூழ்மரங்களை கொள்முதல் செய்து, அறுவடை செய்யப்பட்ட நிலங்களுக்கு மானிய விலையில் நாற்றுகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

நமது நிறுவனம் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யும் செய்தியை ஊடக வாயிலாகவும், சமூக வலைத்தளங்களிலும் பரப்பியது. விவசாயிகளின் பணியை எளிதாக்கும் வகையில், பாதிப்படைந்த 4 மாவட்டங்களில், 19 இடங்களில் தற்காலிக கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டது. இந்த 19 மையங்களிலும் சுமார் 40 பட்டை உரிக்கும் இயந்திரங்களையும், போக்குவரத்து செய்ய லாரிகளையும் ஏற்பாடு செய்து, விவசாயிகள் இந்த வசதிகளை நேரடியாக பயன்படுத்தி, புயலினால் பாதிப்படைந்த கூழ்மரங்கள் அனைத்தையும் நமது நிறுவனத்திற்கு நேரடியாக அனுப்பி நியாயமான விலையை பெற்றுத் தர உதவி செய்து வருகிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து கூழ்மரங்களை இடைத்தரகர்கள் குறைந்த விலையில் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு மேலும் பாதிப்பு ஏற்படுத்துவதனை தடுக்கும் பொருட்டு, நமது நிறுவனத்தின் தற்போதைய கூழ்மர கொள்முதல் விலையான 5575 ரூபாய் பட்டை உரித்த சவுக்கு கட்டைக்கும் 5000 ரூபாய் தைல கட்டைக்கும் வழங்குவதாக ஊடகங்கள் மூலமாக தெரியப்படுத்தி விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது.

இதுவரை சுமார் 90,000 மெ.டன் அளவிற்கு 620 க்கும் மேற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்துள்ளது.



## பண்ணைக் காடுகள் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்த சிறந்த விவசாயியின் விவரங்கள் மற்றும் சாகுபடிக் குறிப்புகள்

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக் கோட்டை வட்டம், கல்லாக் கோட்டை கிராமத்தில் வசிப்பவர் திரு. வே. ராமலிங்கம் ஆவார். இவரிடம் உள்ள மொத்த நிலப்பரப்பு 8 ஏக்கர் ஆகும். அதில் 2015 -16 ஆம் ஆண்டு நமது நிறுவனத்திடம் பண்ணைக்காடுகள் திட்டதின் கீழ் உயர் ரக சவுக்கு வீரிய குளோனல் ரக நாற்றுகளை பயிரிட்டார். அதனுடன் ஊடு பயிராக வேர்க்கடலை மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்தார். கஜா புயலில் இவரது தோட்டமும் பாதிப்படைந்த நிலையில் அதிக லாபத்தை ஈட்டி வனத் தோட்டத்துறை செய்தி மடலில் இடம் பெற்றுள்ளார். ஒரு ஏக்ககருக்கான சாகுபடிக் குறிப்புகள் மற்றும் வரவு, செலவு மற்றும் நிகர இலாப விவரங்களை பிற விவசாயிகளின் நன்மைக்காக இங்கு பகிரிந்துள்ளார்.

| பயிர் விவரம் | சவுக்கு | வேர்க்கடலை | பச்சைப்பயிர் |
|---|---|---|---|
| பயிரிடப்பட்ட காலம் | நவம்பர் 2015 | நவம்பர் 2015 | பிப்ரவரி 2016 |
| அறுவடை செய்த காலம் | ஜனவரி 2018 | ஜனவரி 2016 | ஏப்ரல் 2016 |
| மகசூல் விவரம் | 60 மெ.டன் | 1400 கிலோ | 300 கிலோ |
| சந்தை விலை | ரூ.5575/மெ.டன் | ரூ.54 கிலோ | ரூ.60/ கிலோ |
| மொத்த லாபம் | 334500 | 75600 | 18000 |
| நிகர லாபம் | 215500 | 62900 | 14140 |
| மூன்று வருடத்தில் லாபம் | 292540 | | |



நான் இயற்கை உரம் தான் பயன்படுத்தினேன், குறிப்பிட்ட காலநிலையில் பயிரிட்டேன் அப்பறம் என் குடும்ப உறுப்பினர்கள எல்லாம் சேர்ந்து விவசாயம் பண்ணதால என்னால இவ்வேளா இலாபம் எடுக்க முடியுது. அது போக டி.என்.பி.எல் குளோனல் நாற்றுகளும் நல்ல மகசூல் தந்துச்சு.!

திரு. வே. ராமலிங்கம்
+91 99436 52402

## இந்தியாவில் மரங்களின் தேவை மற்றும் முக்கியத்துவம்

மரக்கட்டைகளை வெளிநாட்டிலிருந்து அதிகமாக இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மரக்கட்டைகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே தான் உள்ளது. ஆனால் அத்தேவையை நம்மால் பூர்த்தி செய் இயலவில்லை. ஏனெனில் வனப்பகுதிகளை அழிக்க கூடாது என்பது நமது இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். மரங்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டே வனத்திற்கு வெளியே காடுகள் உருவாக்கப்பட்டு, அதில் பயன்தரும் மரங்களை வளர்த்து நம்முடைய தேவையை பூர்த்தி செய்து வருகிறோம்.

உதாரணத்திற்கு, இந்தியாவில் தற்போதைய மரக்கட்டையின் தேவை 52.45 மில்லியன் கனமீட்டர் ஆகும். அதில் 82 சதவீதம் மனிதனால் உருவாக்கப்பட்ட காடுகளின் மூலமாகவும், 12 சதவீதம் வெளிநாட்டு இறக்குமதி மூலமாகவும் மற்றும் மீதம் உள்ள 6 சதவீதம் மட்டுமே அறுவடைக்கென்று ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகளில் இருந்தும் பெறப்படுகிறது. இதில் இருந்தே மனிதால் உருவாக்கப்பட்ட காடுகளின் வளர்ச்சி எந்த அளவு என்பதை நம்மால் உணரமுடிகிறது. இருப்பினும் இத்தகைய காடுகள் வளர்ப்பதில் விவசாயிகளுக்கு பல இன்னல்கள் உள்ளது. அவை விவசாய பயிர்களை பயிரிட முடியாத சூழல், சந்தை விலையில் ஏற்ற இறக்கம், குறைந்த மகசூல், அதிக பராமரிப்பு செலவுகள் மற்றும் அதிக பயிற்சுழற்சி காலம் போன்றவை மிக முக்கியமான காரணிகளாகும். மரங்களின் தேவை மற்றும் அதன் இதர பயன்பாடுகள் குறையாத பட்சத்தில், அதனை அதிக அளவில் பயிரிடும் பொருட்டு, விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்து நமது தேவைக்கு நாமே உற்பத்தி செய்து நம்முடைய பொருளாதாரத்தை மேம்படுத்துதலே சிறந்த வழி ஆகும்.

இதற்கான முதல் அடி எடுத்து வைக்க குறைந்த பயிர்சுழற்சி காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய குளோனல் ரகங்களை உருவாக்கி, அதனை விவசாயிகள் அதிக அளவில் பயிர் செய்ய ஊக்குவிக்க அனைவரும் முன் வர வேண்டும். மேலும், நிலையான சந்தை வாய்ப்புள்ள மர ரகங்களை தேர்ந்தெடுத்து வேளாண் காடுகள் திட்டத்தின் கீழ் விவசாய பயிர்களுடன் ஊடுபயிராக பயிர் செய்வதன் மூலம் இரட்டிப்பு இலாபம் பெற இயலும்.

## இதற்கான தீர்வுக்கு டி.என்.பி.எல் இன் முயற்சி

### நிலையான சந்தை வாய்ப்பு

இத்தகைய சூழலில் டி.என்.பி.எல், விவசாயிகளுக்கு உதவும் வகையில் சவுக்கு, தைலம் மற்றும் இதர கூழ்மரங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு நிலையான சந்தை வாய்ப்பை உறுதி செய்கிறது. தற்போதைய ஆலை வாயில் விலை:

பட்டை உரித்த சவுக்கு மரம் ரூபாய். 5575/- டன் பட்டை உரித்த தைலம் மற்றும் இதர கூழ்மரங்கள் ரூபாய். 5000/- டன்

### குளோனல் நாற்று ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி

தற்போது தைலம் மற்றும் சவுக்கு மரங்களில் பல்வேறு ஆராய்ச்சி செய்து நிலத்தின் தன்மைக்கேற்ப, குறைந்த சுழற்சி காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய குளோனல் ரகங்கள் டி.என்.பி.எல் நிறுவனத்தாலும் மற்றும் பிற ஆராய்ச்சி நிலையங்கள் மூலமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வகை உயர்ரக தைலம், மலைவேம்பு மற்றும் சவுக்கு மர நாற்றுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகள் நலனுக்காக நிலத்தின் தன்மை கேற்ப கூழ்மரக் குளோனல் கன்றுகளை தேர்ந்தெடுத்து விவசாயிகளின் நிலங்களுக்கே மானிய விலையில் வழங்கி வருகிறது.

### விவசாய பயிரை ஊடு பயிர் செய்தல்

டி.என்.பி.எல் வனத்தோட்டத் திட்டம் ஆரம்பிக்கும் போது, கூழ்மரங்கள் மட்டும் நடவு செய்து வந்தது. ஆனால் தற்போது மாறி வரும் சூழலில், இயற்கை இடர்பாடுகளினால் விவசாயத்தில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்கும் பொருட்டு, வருவாய் உத்தரவாதத்தை கொடுக்கக் கூடிய வகையில் வேளாண் காடுகள் திட்டத்தினை உருவாக்கி விவசாயிகளை ஊக்குவித்து மற்ற பயிர்களுடன் கூழ்மரங்களை நடவு செய்வதில் முழு முயற்சியாக ஈடுபட்டு அதற்கான ஆலோசனைகளும் தந்து வருகிறது.

### குறைந்த சாகுபடி மற்றும் அறுவடை செலவு

விவசாயிகளின் பெரும் கவலை சாகுபடி மற்றும் அறுவடை செலவு. கரும்பு மற்றும் இதர பயிர்களை அறுவடை செய்வதற்கு மொத்த சாகுபடி செலவில் 25முதல் 30 சதவீதம் செலவாகின்றது, ஆனால் மரப்பயிர்களுக்கு 40 சதவீதத்திற்கும் மேல் ஆகின்றது. இதனை சரி செய்ய, நிறுவனமானது அறுவடையை முழுவதுமாக இயந்திரப்படுத்தி செலவீனங்களை குறைக்கும் முயற்சியை அடுத்த குறிக்கோளாக கொண்டு இயங்கி வருகிறது.

கூழ்மரங்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் நல்ல இலாபம் கிடைக்கும் என்பதில் சிறிதளவும் ஐயம் கொள்ளாமல் கூழ்மரப்பயிர் நடவு செய்து அதீத இலாபம் பெற்று பிற விவசாயிகளுக்கும் அதனுடைய பலன்களை எடுத்துரைப்பீர்!

"இந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்த மரங்களின் தேவை இன்றியமையாதது, அதற்கு விவசாயிகளின் முயற்சி அடிப்படையானது."

வெளியீடு : தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரூர்.
தொடர்புக்கு : தொலைபேசி எண் : 04324 - 277001 to 277017
அலைபேசி - 94425 91408,
மின்னஞ்சல் முகவரி : plantation@tnpl.co.in

**மரம் வளர்ப்போம்** மழை பெறுவோம்
வளம் பெறுவோம்